தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

ஜய, ஆடி 1, திருவள்ளுவர் ஆண்டு – 2045

2014 ஜூலை 17, வியாழக்கிழமை

சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. ப. தனபால்** *அவர்கள் தலைமையில் காலை 10–00 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"கற்க கசடறக் கற்பவை; கற்றபின்
நிற்க அதற்குத் தக."

படிப்பதற்குரிய நூல்களைக் குற்றம் இல்லாமல் கற்க வேண்டும். அதன் பிறகு கற்ற நூல்களில் அறிந்து கொண்டதற்குத் தக்கவாறு வாழ்க்கையில் அவற்றைப் பின்பற்றி நடக்க வேண்டும்.

1. வினாக்கள்–விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்-விடைகள், வினா வரிசை எண் 165, மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. இராமச்சந்திரன், மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

165—

வாய்க்காலைச் சீரமைத்தல்

***33232—திரு. டி. இராமச்சந்திரன்:**

மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தளி தொகுதி, தளி பெரிய ஏரி வாய்க்காலைச் சீரமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) கிருஷ்ணகிரி மாவட்டம், தேன்கனிக்கோட்டை வட்டம், தளி கிராமத்திலுள்ள தளி பெரிய ஏரியில் உடைந்துபோன ஏரிக்கரைப் பகுதியினைச் சரி செய்தல், மிகுதி நீர்போக்கிப் பகுதியினை அகலப்படுத்துதல் மற்றும் மதகு மற்றும் பாசனக் கால்வாய்ப் பகுதிகள் மாண்புமிகு இதய தெய்வம் தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய சீர்மிகு நல்லாட்சியில் 2011–2012 ஆம் ஆண்டு நபார்டு வங்கியின் நிதியுதவியுடன் 2 கோடியே 30 இலட்சம் ரூபாய் செலவில் நிரந்தரமாகச் சீரமைக்கப்பட்டு, பணிகள் முழுவதுமாகச் செய்து முடிக்கப்பட்டுள்ளன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. இராமச்சந்திரன் அவர்கள்.*

திரு. டி. இராமச்சந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தளி பெரிய ஏரி சுமார் 830.41 எக்டர் பரப்பளவு கொண்டது. இந்த ஏரியின் உபரி நீர்தான் தருமபுரி மாவட்டம், பஞ்சப்பள்ளி சின்னார் அணையின் முக்கிய நீர்வரத்தாக உள்ளது. ஏரியின் நீர்ப்பாசனப் பரப்பளவு 109.6 ஏக்கர் ஆகும். ஒரு பக்கப் பாசனக் கால்வாயின் நீளம் சுமார் 850 மீட்டர். மறு பக்கப் பாசனக் கால்வாயினுடைய நீளம் 1,150 மீட்டர் ஆகும். ஆகவே, கடந்த 2011–2012 ஆம் ஆண்டு சுமார் 500 மீட்டர் நீளத்திற்குத்தான் வாய்க்கால்கள் சீரமைக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள வாய்க்கால்களை விவசாயப் பெருங்குடி மக்கள் பயன்பெறும் வகையிலே சீரமைக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிருஷ்ணகிரி மாவட்டம், தேன்கனிக்கோட்டை வட்டத்திலுள்ள தளி பெரிய ஏரியின் உடைப்புகளை நிரந்தரமாகச் சீர் செய்யும் பணி, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய நல்லாட்சியில் 2 கோடியே 30 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில்*

2014 ஜூலை 17]

மார்ச் 2012–ல் ஆரம்பிக்கப்பட்டு மே 2012–ல் பணிகள் முழுவதுமாக முடிக்கப்பட்டுள்ளன. இதனால் 109.60 ஏக்கர் பாசனம் பயன் அடையும் என்பதை இம்மாமன்றத்திற்குத் தெரிவித்துக் கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மேற்கொண்டு பணிகள் செய்ய வேண்டும் என்ற கோரிக்கையினை இங்கே எடுத்துக் கூறியிருக்கின்றார்கள். அவர்களுடைய கோரிக்கையினை இதய தெய்வம் புரட்சித் தலைவி மாண்புமிகு அம்மா அவர்களுடைய மேலான கவனத்திற்கு எடுத்துச் சென்று ஆய்வுக்கு உட்படுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. இராமச்சந்திரன் அவர்கள்.

திரு. டி. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மீதமுள்ள ஏரி வாய்க்கால்கள் சீரமைக்கப்படும் என்று அறிவித்த மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கிருஷ்ணகிரி மாவட்டம், தென்பெண்ணையாற்றினுடைய உபரி நீர் மழைக் காலங்களிலே வீணாக ஆற்றிலே கலக்கின்றது. அந்த உபரி நீரைக் கால்வாய் வெட்டி தென்பெண்ணை ஆற்றின் கூடூர் பள்ளம் அருகே தடுத்து, தளி தொகுதியிலுள்ள கெலமங்கலம் மற்றும் ராயக்கோட்டைப் பகுதியிலுள்ள நூற்றுக்கும் மேற்பட்ட ஏரிகளை நிரப்புவதன்மூலம் நிலத்தடி நீரும் உயரும், சுமார் ஆயிரம் ஏக்கர் பரப்பளவிலே சாகுபடி செய்ய விவசாயப் பெருங்குடி மக்களுக்கும் ஏதுவாக இருக்கும். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தென்பெண்ணையாற்றின் உபரி நீரை, கால்வாய்கள் வெட்டி, ஏரியை நிரப்ப முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிருஷ்ணகிரி மாவட்டம், தேன்கனிக்கோட்டை வட்டம், ராஜகல்பாறை கிராமம், அஞ்சட்டி அருகில் செயற்கை முறையில் நிலத்தடி நீர் செறிவூட்டும் திட்டத்தின்கீழ் தடுப்பணை கட்டும் பணியானது மாண்பு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்களுடைய நல்லாட்

ரூ.63 இலட்சம் மதிப்பீட்டில் நவம்பர் 2011-ல் தொடங்கப்பட்டு, மே 2012-ல் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. இதனால் 22.80 ஏக்கர் பாசனப் பகுதிகள் பயனடையும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், கிருஷ்ணகிரி மாவட்டம், தேன்கனிக்கோட்டை வட்டத்திலுள்ள பிரதான நீர்நிலையான ஜவளநாயக்கன்பட்டி ஏரி புனரமைத்தல் பணியானது மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்களுடைய உத்தரவின்பேரில், ரூ.14.25 இலட்சம் மதிப்பீட்டில் ஏப்ரல் 2013-ல் தொடங்கப்பட்டு ஆகஸ்ட் 2013-ல் செய்து முடிக்கப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இதனால் 101.88 ஏக்கர் பாசனப் பகுதிகள் பயனடையும் என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றேன். மேலும், கிருஷ்ணகிரி மாவட்டம், தேன்கனிக்கோட்டை வட்டத்திலுள்ள பிரதான நீர்நிலையான அடவங்கா ஏரி புனரமைத்தல் பணியானது, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்களின் ஆணையின்படி ரூபாய் 32.50 இலட்சம் மதிப்பீட்டில் மார்ச் 2014-ல் துவங்கப்பட்டு பணிகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன என்பதனையும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-05

கிருஷ்ணகிரி மாவட்டம், தேன்கனிக்கோட்டை வட்டத்திலுள்ள மஸ்திஹல்லா ஏரி புனரமைத்தல் பணி, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்களின் நல்லாட்சியில் ரூபாய் 14.50 இலட்சம் மதிப்பீட்டில் துவங்கப்பட்டு, தற்போது பணிகள் நடைபெற்று வருகின்றன என்பதனையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி கிருஷ்ணகிரி மாவட்டம், தளி தொகுதியில் மேற்கூறிய திட்டங்களின் செயலாக்கத்தினால் இதுவரை மொத்தம் ரூபாய் 3 கோடியே 54 இலட்சம் செலவில் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்பதனை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தென்பெண்ணை ஆற்றின் உபரி நீரைப் பயன்படுத்திக் கொள்ளும் வகையில் புதிய வாய்க்கால்-புதுப் பணிகள் என்று நினைக்கிறேன்-அமைத்துத் தர வேண்டுமென்ற கோரிக்கையினை இங்கே வைத்திருக்கிறார்கள். இதையும் மாண்புமிகு அம்மா அவர்களின் மேலான கவனத்திற்கு

2014 ஜூலை 17]

எடுத்துச்சென்று, ஆய்வுக்கு உட்படுத்தப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாலகிருஷ்ணன் அவர்கள்.

திரு. க. பாலகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மழைக் காலங்களில் கொள்ளிடம் ஆற்றின் உபரித் தண்ணீர் வீணாகச் சென்று கடலிலே கலப்பதைத் தடுத்து, கோ. ஆதனூர், குமாரமங்கலத்திற்கு இடையே கதவணை கட்டி, அந்தத் தண்ணீரைக் குடிநீருக்காகவும், பாசனத்திற்காகவும் சிதம்பரம் பகுதிக்கு திருப்பிவிடுகிற திட்டத்தை நீண்டகாலமாக மக்கள் கோரிவருகின்றார்கள். இத்திட்டம் அரசினுடைய பரிசீலனையிலும் இருக்கிறது. அதற்காக திட்ட மதிப்பீடுகளும் தயாரிக்கப்பட்டதாக அறிகிறோம். எனவே, இதை உடனடியாக நிறைவேற்றித் தர, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. பாலகிருஷ்ணன் அவர்கள் கொள்ளிடம் ஆற்று நீரில் தடுப்பணை கட்டி, அதன்மூலம் குடிநீர் ஆதாரத்தைப் பெருக்கவேண்டுமென்று ஒரு கோரிக்கையினை இங்கே வைத்திருக்கிறார்கள். பொதுவாக, கொள்ளிடம் ஆறு சமநிலையில் ஓடுகின்ற ஆறு. தடுப்பணை கட்டுவதற்குரிய ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. அதற்கான வாய்ப்பிருப்பின் மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் மேலான கவனத்திற்கு எடுத்துச்சென்று, ஆய்வுக்கு உட்படுத்தப்படும் என்பதனைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. கலை அரசு அவர்கள்.

திரு. ம. கலை அரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மன்னர்கள் காலங்களில்தான் குளங்களை வெட்டினார்கள், ஏரிகளை அமைத்தார்கள் என்றெல்லாம் நாம் பாடப் புத்தகங்களில் படித்திருக்கின்றோம். மாண்புமிகு இதய

தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆட்சியில் தமிழ்நாட்டில் (மேசையைத் தட்டும் ஒலி) தண்ணீர்ப் பிரச்சினையைப் போக்குவதற்காகவும், விவசாயம் வளம்பெறும் வகையில் நீர் ஆதாரத்தைப் பெருக்குவதற்காகவும் பல்வேறு திட்டங்களை அளித்திருக்கிறார்கள் என்பதை நாட்டு மக்கள் நன்குணர்ந்த காரணத்தினாலேதான் மாண்புமிகு அம்மா அவர்களுக்கு மகத்தான வெற்றியை அளித்துக் கொண்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

வேலூர் மாவட்டம், வறட்சியான மாவட்டம், இது உலகறிந்த உண்மை. அதிலும், குறிப்பாக வேலூர் என்றாலே வெய்யிலூர் என்று சொல்வார்கள். வேலூருக்கு அருகே இருக்கக்கூடிய ஓட்டேரி, சதுப்பேரி போன்ற ஏரிகளெல்லாம் நிரம்பி பல ஆண்டுகள் ஆகின்றன. வேலூருக்கு அருகிலே ஓடிக்கொண்டிருக்கக்கூடிய நாகநதியில் மழைக் காலங்களில் ஓடுகின்ற உபரி நீரைத் திருப்பி, இந்த இரண்டு ஏரிகளையும் நிரப்பிவிட்டால், நீராதாரம் பெருகுவதோடு, அதைச் சுற்றியுள்ள கிராமங்களிலுள்ள விவசாயமும் வளம்பெறும், கடுமையாக இருக்கக்கூடிய குடிநீர்ப் பிரச்சினையும் தீரும் என்கிற காரணங்களினால் மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களின் அரசு இதைக் கவனிக்குமா என்பதைத் தங்களின் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், ஓட்டேரி உள்ளிட்ட இரண்டு ஏரிகளின் வரத்துக் கால்வாய்களைச் சீரமைத்து, அதற்கு நீர் வழங்கிட வேண்டுமென்ற கோரிக்கையினை இங்கே வைத்திருக்கிறார்கள். மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் மேலான பார்வைக்கு எடுத்துச்சென்று, இது ஆய்வு செய்யப்படும் என்பதனைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 166, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ.க. அரங்கநாதன், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.